10.08.2017

தினமலர்

'இயல்பை விட கூடுதல் பருவமழை'



சென்னை: தென் மேற்கு பருவமழை , இயல்பை விட , இரண்டு சதவீதம் அதிகமாக பெய்துள்ளதாக, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
மேற்கு திசையிலிருந்து வரும் காற்று , தமிழகத்தில் வலுவாக உள்ளதால் , ஆங்காங்கே மழை பெய்து வருகிறது. தெலுங்கானா முதல் , கன்னியாகுமரி வரையில் , காற்றழுத்த தாழ்வு நிலை உள்ளது. அதேபோல், லட்சத்தீவு அருகில் மேல் அடுக்கு சுழற்சி உள்ளது. அதனால், தமிழகத்தின் தென் மாவட்டங்களில் , பெரும்பாலான இடங்களில் , மழை தொடரும் என , வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. வட மாவட்டங்களிலும் , புதுச்சேரியிலும், சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் , சென்னையில், மாலை மற்றும் இரவு நேரங்களில் மழை பெய்யலாம் என்றும் , வானிலை கணிப்பில் கூறப்பட்டுள்ளது.

இது குறித்து , சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் பாலச்சந்திரன் கூறுகையில், "ஜூன், 1 முதல் நேற்று வரை , 13.8 செ.மீ., மழை பெய்துள்ளது. இது இயல்பு அளவான, 13.5 செ.மீ.,யை விட, இரண்டு சதவீதம் அதிகம்," என்றார். நேற்று காலை, 8:30 மணி வரையிலான , 24 மணி நேர நிலவரப்படி , அதிகபட்சமாக, பட்டுக்கோட்டை, அதிராம்பட்டினத்தில், 13 செ.மீ., மழை பதிவானது.

**மேட்டூர் 5ம் கண் மதகில் பெருக்கெடுத்த தண்ணீர்**



மேட்டூர்: மேட்டூர் அணையின் , ஐந்தாம் கண் மதகில் நேற்று , 4,200 கன அடி நீர் , கரைபுரண்டு ஓடியதை , மக்கள் ஆர்வ முடன் வேடிக்கை பார்த்தனர்.

மேட்டூர் அணை நீர்மட்டம் , நேற்று, 40.76 அடியாகவும், நீர் இருப்பு , 12.48, டி.எம்.சி.,யாகவும் இருந்தது. அணைக்கு வினாடிக்கு , 7,063 கன அடி நீர் வந்தது. வினாடிக்கு, 3,000 கன அடியாக இருந்த நீர் திறப்பு , நேற்று முன்தினம் இரவு , 7,000 கன அடியாக அதிகரிக்கப்பட்டது.

இதில், 2,800 கன அடி நீர், அணை மின் நிலையம் வழியாகவும், மீதமுள்ள, 4,200 கன அடி நீர் , அணை, ஐந்தாம் கண் மதகு வழியாகவும் வெளியேற்றப்பட்டது.

இந்த நீரின் ஒரு பகுதி , வரும் நாட்களில் , வீராணம் ஏரியை சென்றடையும். அங்கிருந்து, சென்னைக்கு குடிநீர் வினியோகம் செய்யப்படும்.

பல ஆண்டுகளுக்கு பின் , ஐந்தாம் கண் மதகில் அதிகபட்சமாக , 4,200 கன அடி நீர் திறக்கப்பட்டுள்ளது. கால்வாயில் கரைபுரண்டு தண்ணீர் ஓடியதால் , சுற்றுலா பயணியர், கரையோர மக்கள் கூட்டம், கூட்டமாக சென்று வேடிக்கை பார்த்தனர்.

**கொடைக்கானலில் தயாராகும் காஷ்மீர் குங்குமப்பூ**

கொடைக்கானல்: திண்டுக்கல் மாவட்டம் , கொடைக்கானலில் காஷ்மீர் மாநில குங்குமப்பூ வருகிற செப்டம்பரில் பூக்கத் தயாராகி வருகிறது.

கொடைக்கானல், மேல்மலை கிராமம் கவுஞ்சியில் விவசாயி மூர்த்தி குங்குமப்பூ பயிரிட்டு வருகிறார்.

அவர் கூறியதாவது: உலகளவில் ஆப்கானிஸ்தான் , ஈரான், துருக்கி, ஸ்பெயின் போன்ற நாடுகள் குங்குமப்பூ உற்பத்தி செய்கின்றன.இந்தியாவில் காஷ்மீர் மாநிலம் , படுகாம், பாம்புரே மாவட்டங்களில் குங்குமப்பூ பயிரிடப்படுகிறது.

சாகுபடி முயற்சி உலகளவில் இந்தியா குங்குமப்பூ உற்பத்தியில் 3ம் இடத்தை பெற்றுள்ளது. இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகத்தால் , மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியிலும் சீதோஷ்ண நிலை குறித்து ஆய்வு செய்து சாகுபடி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது.

இதையடுத்து கொடைக்கானல் , மேல்மலை பகுதி கிராமங்களை தேர்ந்தெடுத்தனர். இவ்வகையில் 2012 மற்றும் 2013ல் எனக்கு பாம்புரே மாவட்ட தோட்டங்களில் பயிற்சி அளிக்கப்பட்டது. பின்னர் ஒரு கிலோ விதை கிழங்கு வழங்கப்பட்டது. நிதி ஒதுக்க வேண்டும் அதை இங்கு 9 கிலோ என்ற அளவில் உற்பத்தி செய்தேன். 2014 முதல் 2016 வரை மலர்களில் இருந்து குங்குமப்பூ எடுக்கப்பட்டது.

அதை மத்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்திற்கு அனுப்பினால் , அதன் தரம் போன்றவற்றை ஆய்வு செய்கின்றனர். தற்போது வரை பரிசோதனை முயற்சியாகவே சாகுபடி நடக்கிறது.

கொடைக்கானல் பகுதியில் இந்த சாகுபடியை விரிவாக்கம் செய்வதற்கான சாத்தியக்கூறு உள்ளது. அதற்கு மத்திய வேளாண்மைத் துறை நிதிஒதுக்க வேண்டும். தற்போது பயிரிட்டுள்ள செடிகளில் வரும் செப்டம்பர் , அக்டோபரில் மொட்டு விட்டு , பூக்கத் துவங்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.

**வெங்காய விலை 'விர்...' மக்கள் கலக்கம்**



தமிழகத்தில் வெங்காயம் விலை தொடர்ந்து அதிகரித்து வருவதால் , நுகர்வோர் கலக்கம் அடைந்து உள்ளனர். தமிழகத்தின் திண்டுக்கல் , கோவை உள்ளிட்ட சில மாவட்டங்களில், பெரிய வெங்காயம் மற்றும் சாம்பார் வெங்காயம் சாகுபடி நடக்கிறது. ஆனால் , மாநிலத்தின் தேவையை பூர்த்தி செய்யும் அளவிற்கு , போதுமானதாக இல்லை. இதனால் , தமிழகத்திற்கு தேவையான வெங்காயம் , மஹாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரா ஆகிய மாநிலங்களில் இருந்து வருகிறது. தற்போது, ஆந்திராவில், வெங்காய சீசன் இல்லை. கர்நாடகா , குஜராத் மாநிலங்களில் மழை பெய்வதால் , அறுவடை பாதிக்கப்பட்டுள்ளது. எனவே , வெங்காய தேவைக்கு , மஹாராஷ்டிரா மாநிலத்தை மட்டுமே நம்ப வேண்டியுள்ளது. இதனால் , வெங்காயம் விலை உயர்ந்து வருகிறது.

இது குறித்து , சென்னை கொளத்துாரைச் சேர்ந்த வெங்காய வியாபாரி , சந்தோஷ் கூறியதாவது:

சென்னை மட்டுமின்றி, கோவை, மதுரை, திருச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் , திங்கள் முதல், வெங்காய விலை அதிகரிக்க துவங்கி உள்ளது. சென்னையில் , 10 முதல், 20 ரூபாய்க்கு கிடைத்த , ஒரு கிலோ பெரிய வெங்காயம் , 35 முதல், 45 ரூபாய் வரை விற்கப்படுகிறது. 80 ரூபாய்க்கு விற்கப்பட்ட சாம்பார் வெங்காயம் , 100 முதல், 120 ரூபாய் வரை விற்கப்படுகிறது. வெங்காய வரத்தை பொறுத்து , விலையில் ஏற்றம் , இறக்கம் இருக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

அடுத்தடுத்து, ஆடித் திருவிழா, விநாயகர் சதுர்த்தி, விஜயதசமி என, பண்டிகை வரும் காலத்தில், வெங்காயம் விலை உயர துவங்கி உள்ளதால், பொதுமக்கள் கலக்கம் அடைந்துள்ளனர்.

- நமது நிருபர் -